# மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

## (இனம் - 25)

01. 73–ஆவது / 74–ஆவது அரசியலமைப்பு சட்டத் திருத்தமானது 29 இனங்களிலான அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பஞ்சாயத் ராஜ் நிறுவனங்களிடம் ஒப்படைக்க வகை செய்கிறது. அதில் 25–ஆவது இனமானது பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்குத் தொடர்புடையது. 25–ஆவது இனத்தில் பெண்களின் ஏழ்மை அகற்றும் திட்டங்கள், பெண்கள் நலம், குழந்தைகள் நலம், பெண் தொழிலாளர் நலம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவை இடம் பெறுகின்றன. ஏழ்மை அகற்றும் திட்டமான 16–ஆவது இனத்திலும் பெண்களுக்கான திட்டங்கள் இடம் பெற்றிருப்பதால், அவை இதில் சேர்க்கப்படவில்லை. இந்த இனத்தில் பெண்கள் நலம், குழந்தைகள் நலம், பெண் தொழிலாளர் நலம் மற்றும் ஊட்டச்சத்து பற்றிக் கவனிப்போம்.

### அ. குழந்தைகள் நலம்

### I. ஊட்டச் சத்து

02. தமிழ்நாட்டில் செயற்படுத்தப்படும் ஊட்டச்சத்து திட்டமானது குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டு பெண்களின் உடல்நிலையையும் ஊட்டச்சத்தினையும் மேம் படுத்தவும், இறந்து பிறக்கும் குழந்தைகள் வீதம் மற்றும் பேறுகால இறப்பு வீதத்தை குறைக்கவும், வயதானவர்களின் ஊட்டச்சத்துக் குறைபாடினைச் சரி செய்யவும் ஏற்படுத்தப்பட்டது. (i) தமிழ்நாடு அரசு ஊட்டச்சத்துணவுத் திட்டம் (ஊ.ச.தி) (ii) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்திட்டம் (த.ஒ.ஊ.தி) மற்றும் (iii) ஒருங்கிணைந்த குழந்தைகள் முன்னேற்றப் பணிகள் திட்டம் (ஒ.கு.மு.தி) எனும் முப்பெருந் திட்டங்கள் இதில் அடங்கியுள்ளன. இம்மாநிலத்தில் சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக் குழு உதவியுடன் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் எனும் பெயரில் வெளிநாட்டு நிதி உதவித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் அமைந்த மையங்கள் மற்றும் சேவை பெற்றவர்கள் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | குழந்தைகள் | கருவூற்ற மற்றும் பாலூட்டும் பெண்கள் | ஓய்வூதியம் பெறும் முதியோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| I. சத்துணவுத் திட்டம் | | | | | |
| 1. குழந்தை நலம் ம.உதி நிலையங்கள் | | | | | |
| அ. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (குநமை) | 10085 | 5.74 | 1.65 | – | 7.39 |
| ஆ. தமிழ்நாடு ஒருங் – கிணைந்த சத்துணவுத் திட்டம் (குநமை) | 18342 | 6.55 | – | 1.08 | 7.63 |
| இ. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ம.உ.தி நகர்புற (குநமை) | 882 | 0.38 | – | – | 0.38 |

| திட்டம் | | மையங்களின் எண்ணிக்கை | குழந்தைகள் | கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்கள் | ஓய்வூதியம் பெறும் முதியோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2. | பள்ளி ம.உ.தி மையங்கள் | | | | | |
| | அ. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ம.உ.தி நிலையங்கள்–ஊரகம் | 37438 | 56.00 | – | – | 56.00 |
| | ஆ. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ம.உ.தி பள்ளி மையங்கள்– நகர்புறம் | 2079 | 4.68 | – | – | 4.68 |
| | மொத்தம் ம.உ.தி | 68826 | 73.35 | 1.65 | 1.08 | 76.09 |
| 3. | த.நா.ஒ.ஊ.ச.தி–துணை ஊட்டச்சத்து மற்றும் பல பணிகள் | 19482 | 3.58 | 2.86 | – | 6.44 |

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (ஒ.கு.மே.தி)

03. வறுமை பாதிப்புக்குள்ளான குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு மிக முக்கியமானதொரு கட்டத்தில் ஊட்டசத்துக் குறைபாட்டுப் பிரச்சினையைத் தீர்வு செய்ய ஒருங்கிணைந்த முறையில் தொண்டு செய்வதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் 1975–76இல் அறிமுகப் படுத்தப்பட்டது. இப்போதைய நிலையில், தமிழ்நாட்டில் 2 மலைப்புற மற்றும் நகர்ப்புறத் திட்டங்கள் உள்ளிட்ட 111 திட்டங்கள் உள்ளன. இந்த 111 திட்டங்களில், 47 திட்டங்கள் சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக்குழுமத்தின் (SIDA) உதவியுடன் நிறைவேற்றப்படுகின்றன. கு.ஒ.வ.தி –இன் கீழ் உள்ள செறிவுத் திட்டமானது, கூடுதல் ஊட்டச்சத்து, முன்பருவப் பள்ளிக்கல்வி, உடல் நலப் பரிசோதனை, நோய்த் தடைக்காப்பு, ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி, மற்றும் தொடர்புடைய சேவைகளை உள்ளடக்கியதாகும். சிடா–ஒ.கு.வ.தி, 1989–இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இப்போது செங்கை எம்.ஜி.ஆர், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 47 வட்டாரங்களில் செயற்படுகிறது. இத்திட்டமானது ஒ.கு.வ.தி – இன் கீழ் தொண்டாற்றலை மேம்படுத்தவும் கூடுதல் உள்ளீட்டளவு வாயிலாக இதனை உயர்த்தவும் வகை செய்கிறது. சிடா – ஒ.கு.வதி. இன் செயல் திட்டத்தின் முக்கிய ஆக்கக்கூறுகள் பயிற்சி, அங்கன்வாடி நிலையங்களுக்கு மூலப் பொருள்களுக்கு வகை செய்தல், வருவாய் உருவாக்க நடவடிக்கைகள், மேலாண்மைத் தகவல் திட்டம், புதிய கட்டடங்கள் கட்டுமானம், சிறுமியருக்கான திட்டங்கள் முதலியன உள்ளிட்ட நிலையான ஒ.கு.வ.தி செறிவுத் திட்டங்களுக்குத் துணை நிற்பதற்காகும். ஒ.கு.வ.தி மற்றும் சிடா – ஒ.கு.வ.தி – இன் கீழ் 6 திங்கள் முதல் 6 வயதுக்குட்பட்ட 6 இலட்சம் குழந்தைகளும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் 1.5 இலட்சம் பெண்களும் பயன்பெற்றுள்ளனர்.

## 2. ஊட்டச்சத்து மதிய உணவுத் திட்டம் (மஉதி)

04. ம.உ.தி மூன்று ஆக்கக் கூறுகளைக் கொண்டது. முதலாவது ஆக்கக் கூறானது, 2 முதல் 4 வரையுள்ள வயதுடைய குழந்தைகளின் முன் பருவபள்ளிக்கல்வியை உள்ளடக்கியது. இது, குழந்தைகளின்

ஊட்டச்சத்து, கல்வி மற்றும் உடல்நலம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. 29,309 எண்ணிக்கையிலுள்ள பள்ளி பருவத்திற்கு முந்திய குழந்தைகள் நிலையங்கள் (ஒ.கு.வ.தி மற்றும் த.நா.ஒ.ஊ.தி) கீழ் 12.67 இலட்சம் குழந்தைகளைப் பயனடையச் செய்துள்ளன. இரண்டாவது ஆக்கக்கூறானது, பள்ளிகளிலுள்ள 39517 நிலையங்கள் வாயிலாக ஒன்று முதல் பத்தாவது வகுப்பு வரையில் படிக்கும் 5 முதல் 14 வயதுவரையிலுள்ள 60.68 இலட்சம் குழந்தைகளைப் பயனடையச் செய்துள்ளது. மூன்றாவது ஆக்கக்கூறானது, 1.08 இலட்சம் முதியோர் ஓய்வூதியர், முன்னாள் படைவீரர் மற்றும் தமிழ்நாடு அரசிடமிருந்து முதியோர் ஓய்வூதியம் பெறத்தக்கவர்களுக்குப் பயனளிக்கக் கூடியதாக உள்ளது. மற்ற பிற திட்டங்கள், பள்ளிப்பருவத்திற்கு முந்திய / பள்ளிக் குழந்தைகளுக்கு இருவாரத்திற்கொருமுறை முட்டைகள் வழங்குவதையும், முட்டை உட்கொள்ளாத குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதையும் உள்ளடக்கியன வாகும்.

### 3. தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் (த.நா.ஒ.ச.தி II)

05. உலக வங்கியின் உதவியுடன் கூடிய த.நா.ஒ.ச.தி கிராம அளவில் 6 வயதுள்ள குழந்தைகளையும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களையும் கவனித்துக் கொள்வதன் மூலம் தாய்சேய் ஊட்டம், சுகாதாரம் மற்றும் பள்ளி முன்பருவக் கல்வி அளிக்கும் பணியை நிறைவேற்றிவருகிறது. இத்திட்டம் 1990–இல் தொடங்கப்பட்டது. இது 1997 டிசம்பர் திங்கள் வரை தொடருவதுடன், 25 சுகாதார மாவட்டங்களிலுள்ள 318 வட்டாரங்களுக்கு 5 படி நிலைகளில் பயனளிக்கும். குழந்தைகள் வாழ்வு, சுகாதாரம் மற்றும் வளர்ச்சி, கடுமையான மற்றும் மிதமான ஊட்டக்குறைவு நிகழ்வைத் தடுத்தல், குறிப்பிட்ட தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல், குறிப்பிட்ட ஊட்டக்குறைவு நோய்த் தடுப்பு மருத்துவத்திற்கு வகை செய்தல், 3 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்குப் பயனுள்ள முன்பருவக் கல்வித் திட்டம், தாய்மார்களின் பேறுகாலத்திற்கு முந்திய, பேறுகாலத்திய, பேறு காலத்திற்குப் பிந்திய பேணுகை, நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, தொடக்கத்திலிருந்து சமுதாயப் பங்கேற்பு, மனித ஆற்றலுக்கு வகை செய்தல் முதலியவற்றை இத்திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் 19482 சமுதாயச் சத்துணவு மையங்களின் வாயிலாக, 0–36 திங்கள் வயதுள்ள 3.58 இலட்சம் குழந்தைகளையும், 2.86 இலட்சம் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களையும் பயனடையச் செய்துள்ளது. ம.உ.தி–இன் கீழ் இயங்கும் பள்ளிப்பருவத்திற்கு முந்திய வயதுள்ள குழந்தைகளுக்கான 18342 குழந்தைகள் நல நிலையங்கள், 3–6 வயதுள்ள 6.55 இலட்சம் குழந்தைகளுக்கும் 1.08 இலட்சம் ஓய்வுதியம் பெறும் முதியோர்களுக்கும் பயனளிக்கும் திட்டத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

### 4. இந்திய அரசின் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம்.

06. மைய அரசு உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களிலுள்ள குறிப்பிட்ட 89 வட்டாரங்களில் உள்ள தொடக்கக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்பதற்காக, மைய அரசு இலவசமாக அரிசி வழங்குகிறது. இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் படிப்படியான முறையில் விரிவு படுத்தப்படும். 1996–97 இல் 16 மாவட்டங்களில் 96 வட்டாரங்கள் செயலெல்லைக்குட்படுத்தப்படும். அரிசி ஒதுக்கீடானது, 10 திட்டங்களுக்கு, 2.79 இலட்சம் குவிண்டால் அளவுக்கு இருக்கும்.

### 5. கருவுற்ற பெண்களுக்கு உணவளித்தல்.

07. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு உதவித் திட்டத்தின் கீழ் ரூ.300/-ஐ (இப்போது ரூ.500) உதவித் தொகையாகப் பெறும் கருவுற்ற பெண்கள், 6.12.95 முதல் 4 திங்கள் காலஅளவுக்கு சத்துணவு மையங்களில் நாள்தோறும் இலவச மதிய உணவு பெறத்தகுதியுடையவராவர். இத்திட்டத்தின் கீழ் சற்றொப்ப 2 இலட்சம் கருவுற்ற பெண்கள் பயனடைகின்றனர்.

### பசிப்பிணி போக்கும் திட்டம்

08. ஏழ்மையால் ஏற்படும் பசிக்கொடுமையை ஒழிக்கும் நோக்குடன் பசிப்பிணி போக்கும் திட்டம் ஒன்றினை அரசு புதிதாக மேற்கொண்டுள்ளது. 1996–97 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் முதற்கட்டமாக, ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் 7 வட்டாரங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றில் ஏழ்மை அகற்றும் திட்டம் பற்றி விரிவாகப் பகுப்பாய்வு செய்யும் பணியினை 7 கல்வி நிலையங்கள்/பல்கலைக்கழகங்கள் மேற் கொண்டுள்ளன. ஏழ்மைக் குறியீடுகள், நிலம், கால்நடை, மற்ற சொத்துக்கள் இல்லாத குடும்பங்கள், கல்வியறிவற்ற பெண்கள், சிசு மரண வீதம் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

## II ஏனைய குழந்தை நலத் திட்டங்கள்

09. சமூக நலத் துறையின் கீழ் குழந்தைகள் நலத்திற்காகச் செயற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டங்கள், அனாதை இல்லங்கள், பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகம், கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கான குடில்கள் ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பெண்சிசுக் கொலைத் தடுப்பு மற்றும் ஒழிப்பு மற்றும் பெண் குழந்தை நலம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நிலையங்கள் மற்றும் அதில் சேவை பெற்றவர்கள் விவரம் வருமாறு :

| நிலையங்கள் | எண்ணிக்கை | சேவை பெற்றோர் |
|---|---|---|
| அனாதை இல்லங்கள் | 25 | 5650 |
| குழந்தை காப்பகங்கள் (ச.நு. துறையால்) | 117 | 2340 |
| குழந்தைகள் காப்பகங்கள் | | |
| (ச.நு. வாரியத்தால்) | 789 | |
| | 906 | |
| | 905 | |
| குடில்கள் | 176 | 4400 |
| பெண் குழந்தை நலம் | | 8000 |

## ஆ. பெண்கள் நலம்

10. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின், விதவைகளின், ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் மறுவாழ்வுக்கான பொருளாதார மற்றும் நலத் திட்டங்கள் பின்வரும் அமைப்புகளின் வாயிலாக நிறைவேற்றப்படுகின்றன.

| நிலையங்கள் | எண்ணிக்கை | சேவை பெற்றோர் |
|---|---|---|
| கூட்டுறவுச் சங்கங்கள் | 177 | 31920 |
| பயிற்சி மையங்கள் | 49 | 775 |
| உற்பத்தி மையங்கள் | 6 | |
| சேவை இல்லங்கள் | 6 | |
| தொண்டு முகமைகளால் நடத்தப்படும் | | |
| சேவை இல்லங்கள் | 3 | 200 |
| ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 1 | 60 |
| பணிபுரியும் பெண்கள் விடுதிகள் | 7 | 390 |
| மகளிர் மன்றங்கள் | 11520 | |

11. மேற்குறிப்பிடப்பட்டவற்றுடன், திருமணம், படிப்பைத் தொடருதல், தன்வேலை வாய்ப்பு முயற்சிகள் முதலியவற்றில் ஏற்படும் சிக்கலான சூழ்நிலைகளில் நிதியுதவி அளிக்கும் பல்வேறு திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றது. இத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் பெண்களின் விவரம் வருமாறு :

| | திட்டம் | பயன்பெற்ற பெண்கள் |
|---|---|---|
| 1. | வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பெண்களுக்கான நிதியுதவி | 10000 |
| 2. | வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கருவுற்ற பெண்களுக்கான பண உதவி | 29100 |
| 3. | விதவை மறுமணம் | 196 |
| 4. | அனாதைப் பெண்களுக்குத் திருமண உதவித்தொகை | 65 |
| 5. | ஏழை விதவைகளின் மகள்களுக்குத் திருமண உதவித்தொகை | 1050 |
| 6. | கலப்புத் திருமண உதவித்தொகை | 554 |
| 7. | ஆதரவற்ற பெண்களுக்கு / விதவைகளுக்கு இலவசமாகத் தையல் பொறிகள் வழங்குதல் | 1000 |
| 8. | ஏழை விதவைகளின் பள்ளிக் குழந்தைகளுக்கு பாட புத்தகங்களும் நோட்டுப் புத்தங்கங்களும் இலவசமாக வழங்குதல் | 4000 |

12. தமிழ்நாட்டிலுள்ள மகளிரை மேம்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகமானது, அது தொடங்கப்பட்ட 1983–ஆம் ஆண்டிலிருந்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 70342 பெண்களுக்கு உதவி செய்துள்ளது. உலக நிதியிலிருந்து வேளாண்மைக்காக நிதியுதவி பெற்று, 1989–ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இது பெண்கள் குழுக்களை அமைப்பதன் வாயிலாக வேளாண்மை, தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, எண்ணெய் வித்துக்கள், கால்நடைப் பராமரிப்பு அல்லது குடிசை மற்றும் ஊரகத் தொழில்கள் முதலிய வருவாய் உருவாக்க நடவடிக்கைகளில் உதவியளிக்கப்பட்ட தருமபுரி, சேலம், தென்னார்க்காடு, விழுப்புரம், மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சார்ந்த 55503 பெண்களுக்குப் பயனளித்துள்ளது. இத்திட்டத்தை, மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது. இது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக மகளிர் மற்றும் குழந்தை வளர்ச்சித் திட்டம், பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம் முதலியவற்றுடன் ஒருங்கிணைக்கப்படும். இக்கழகத்தால் நடத்தப்பட்ட வாழ்க்கைத் தொழில் பயிற்சித் திட்டத்தால் 1992–93 ஆம் ஆண்டில் 335 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

13. 1981–ஆம் ஆண்டில் 63.43 இலட்சமாக இருந்த பெண் பணியாளர்களின் எண்ணிக்கையானது (மொத்த பணியாளர்களில் 26.52%), 1991இல் 82.37 இலட்சமாக (29.89%) உயர்ந்துள்ளது. இதே கால அளவில், கூட்டிணைவுத் துறையில் நியமிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையானது, 32.47 இலட்சத்திலிருந்து 50.19 இலட்சமாக உயர்ந்துள்ளது.

### மாநில அரசின் நிதியுதவி

14. பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரம் வருமாறு :

| | | 1994–95 உள்ளபடியான செலவு | 1995–96 திருத்தப்பட்ட மதிப்பீடு | 1996–97 திருத்தப்பட்ட வ. செ. மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | | (ரூ. இலட்சத்தில்) | |
| 1. | சத்துணவு | 36028.02 | 38214.44 | 39548.34 |
| | (அ) த.நா.ஒ.தி II | 163.81 | 1051.33 | 1690.62 |
| | (ஆ) ஒ.கு.வ.தி | 1819.82 | 2034.62 | 2108.40 |
| | (இ) பிற சிறப்பு சத்துணவு திட்டம் | 83.98 | – | – |
| | (ஈ) மதிய உணவு | 27981.38 | 28816.00 | 29290.83 |
| 2. | குழந்தைகள் நலம் | 509.36 | 434.57 | 458.66 |
| 3. | பெண்கள் நலம் | 2444.15 | 2594.59 | 4912.17 |

**சாதனைகளும், குறைபாடுகளும்**

15. கடந்த காலச் சாதனைகளைக் கணக்கில் கொள்கையில், தமிழ்நாட்டில் 1981–இல் 91/1000 ஆக இருந்த இளங்குழந்தை இறப்பு வீதமானது, 1991–இல் 57/1000 ஆகவும், இதே கால அளவில், பிறப்புக்குப் பிந்திய இறப்பு வீதமானது, 29/1000- இலிருந்து 14/1000 ஆகவும் குறைந்துள்ளது. தேசிய ஊட்டச்சத்து கண்காணிப்பு அலுவலகப் புள்ளி விவரமானது 1975–76 ஆம் ஆண்டில் 12.6% ஆக இருந்த ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கிடையேயான ஊட்டக் குறைவு, 1988–90 இல் 42% ஆகக் குறைந்ததுடன். இதே கால அளவில், இயல்பான ஊட்ட அளவுடன் கூடிய குழந்தைகளின் விழுக்காடு, 6.2–இலிருந்து 8.0 ஆக உயர்ந்துள்ள தென்பதையும் காட்டுகிறது. குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைவு நோய் குறைவையும் போக்கி உள்ளது. குறிப்பாக, 1975–76 இல் 2.9%, ஆக இருந்த கண்களில் வெண்புள்ளிகள் விழும் போக்கானது, 1988–90 இல் 0.6% ஆகக் குறைந்துள்ளது. இதே கால அளவில், உடல் மெலியும் (நோஞ்சான்) போக்கானது 0.6% இலிருந்து 0.2% ஆகக் குறைந்துள்ளது. மொத்த சாதனையளவானது, குறிப்பிடத்தக்க அளவில் இருந்தாலும், போதிய அளவில் கவனிக்கப்பட வேண்டிய சில பகுதிகளும் உள்ளன. கடந்த நான்காண்டுகளில், அதாவது, 1991– ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்நாட்டில் இளங்குழந்தை இறப்பு வீதமானது ஏறத்தாழ 58/1000 எனும் நிலையிலேயே நீடிக்கிறது. மாவட்ட வாரியான புள்ளிவிவரப்படி ஊரகப் பகுதிகளில் இளங்குழந்தை இறப்பு வீதமானது பின்வருமாறு வேறுபடுகிறது. தருமபுரியில் உயர் அளவாக, 1000 பிறந்த குழந்தைகளில் 98.1 %, சேலத்தில் 80.1%, இராமநாதபுரத்தில் 78.1% , ஊரகப் பேறுகால இறப்பு வீதமானது, 1995–இல் தமிழ்நாட்டில் 1.9 / 1000 ஆக இருந்தாலும், நீலகிரியில் உயர் அளவாக 4.5 ஆகவும், அதற்கடுத்தபடியாக பெரம்பலூரில் 3.6 ஆகவும், பசும்பொன் மற்றும் திருச்சியில் 3.3 ஆகவும் உள்ளது. ஊரகப் பகுதியில் இறந்து பிறந்த குழந்தைகளின் வீதமானது 1000 பிள்ளைப்பேற்றில் 18.9 ஆகும். ஊரகப் பகுதியில் குழந்தை இறப்பு வீதம், மற்றும் பேறுகால இறப்பு வீதம் –இன் உயர்வீதமானது குழந்தை பிறந்த ஒரு மாதத்திற்குள் நிகழும் இறப்பின் காரணமாக ஏற்பட்டதாகும்.

16. 0–5 வயதுள்ள குழந்தைகளில் 40% மற்றும் கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களில் 70% ஊட்டக்குறைவு ரத்த சோகை நோயினால் அவதியுறுகின்றனர் என்பதை அறிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன. 1992–ஆம் ஆண்டை தேசிய குடும்ப நல மதிப்பீடானது நான்கு வயதுக் குழந்தைகளில் 47% குழந்தைகள் அவர்களுடைய வயதுக்குக் குறைவான எடையுடனும் 13% குழந்தைகள் மிகக் குறைவான எடையுடனும் உள்ளனர் எனக் குறிப்பிடுகிறது. குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் மொத்த விழுக்காடானது 25.30% எனும் நிலையிலேயே நீடிக்கிறது. நுண்ஊட்ட சத்துக்குறைவுப் பிரச்சினையாது இப்போதும் தொடர்வது உணரப்படுகிறது. தமிழ்நாட்டில் "ஏ" உயிர்ச் சத்துக் குறைவானது, பள்ளிப்பருவத்திய ஒரு விழுக்காடு குழந்தைகளையும், 5–12 வயதுள்ள 2.7% குழந்தைகளையும் நோய் வாய்ப்படுத்துகிறது.

## எதிர்கால முனைப்புப் பகுதிகள்

17. குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் உரிய திட்டங்கள் பிரிக்கப்படக் கூடியதல்லாததால், குழந்தைகள் நலம், பெண்கள் நலம் ஆகியவற்றில் பெருமளவு பயன்களைப் பெற இரண்டையும் ஒருங்கிணைத்து திறமிகு பிள்ளைப்பேறு முறையுடன் கூடிய சமநிலைச் செறிவுத் திட்டம் ஒன்று இன்றியமையாததாகிறது. பெண்சிசுக் கொலையை வேருடன் அழிக்கவும் செறிவுத் திட்டம் ஒன்றினை உருவாக்கவும் விடாமுயற்சியுடன் கூடிய முனைப்பு தேவை. காப்பகங்கள், அனாதை இல்லங்கள், பணிபுரியும் பெண்கள் விடுதிகள் மற்றும் பிற நிலையங்கள் தேவைப்படும் அடிப்படையில் இருக்க வேண்டும். சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பு நடவடிக்கைகள், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புடன் இணைக்கப்பட வேண்டும். வருவாய் பெருக்க நடவடிக்கைகள், தன்வேலைவாய்ப்பு முயற்சி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி, தொழில் முனைவோருக்கான தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்ளல், பயிற்சித் திறமைகளை உயர்த்திக் கொள்ளுதல், தங்களுடைய உரிமைகள் பற்றியும் பெண்கள் நிலைபற்றிய மன மாற்றங்களைப் பற்றியும் விழிப்பு நிலையை அதிகரித்துக் கொள்ளல் ஆகியவற்றுக்கான அரிய வாய்ப்புகள் பெண்களுக்குத் தேவை. குறைந்த வருவாயுடைய மற்றும் ஏழ்மைக் குடும்பங்களைச் சார்ந்த கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், பெண்கள் ஆகியோருக்கு இப்போதுள்ள திட்டங்களைத் தேவையான அளவுக்குப் பயனுடையதாகவும், கைக்கொள்ளக் கூடியதாகவும் செய்து, மறுவாழ்வுப் பணிகளின் தரத்தை மேம்படுத்த வலியுறுத்தல், இன்றியமையாததாகும். இம்மாநிலமானது மகளிர் மன்றங்கள் மற்றும் மதிய உணவு மையங்கள் போன்ற நன்கு நிலை நாட்டப்பட்ட உள்ளமைப்புகளை உடையது. இவற்றைப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஆற்றலும் நம்பிக்கையும் கொண்ட நடவடிக்கைகளில் ஈடுபடச்செய்தல் என்ற அளவில் ஊரக நிலையில் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதில் விரைந்த மற்றும் உறுதியான பங்குவகிக்க மறுகட்டமைப்பு செய்யப்பட்டு வலிவூட்டப்பட வேண்டும். அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மகளிர் குழுக்கள் திட்டச் செயற்பாட்டில் முனைப்புடன் ஈடுபடுவதோடன்றியும் செயலாக்கத் திட்டங்களை உருவாக்குவதிலும் பங்கேற்க வேண்டும்.

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்

18. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு தொடர்பில், 3 படி நிலை பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் செயற்பாடுகள் சிலவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது.

(அ) ஊராட்சி ஒன்றியக் குழு, தன் நிதியின் வரம்புக்குள், தாய் சேய் நல மையங்களை நிறுவிப் பேணவும் செவிலித் தாய் பணியைப் பேணவும் தகுந்த ஒதுக்கீட்டினைச் கொள்ளலாம். (பிரிவு 112)

(ஆ) அரசால் அல்லது எதாவதொரு சட்டமுறையிலான அமைப்பால் அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குள் பிறமுகமையால் நிறைவேற்றப்படும் திட்டங்கள், செயல் திட்டங்கள், பிற நடவடிக்கைகள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியக் குழு மறு ஆய்வு செய்யலாம்.

(இ) பொது மருந்தகங்கள், குழந்தை நல மையங்கள் மற்றும் அதைப் போன்ற பிற வகையான நிறுவனங்களை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் நிறுவிப் பேணலாம். (பிரிவு 118)

(ஈ) மாவட்ட ஊராட்சியும் ஊராட்சி ஒன்றியக் குழுவும், ஏதாவதொரு நிறுவனத்தின் மேலாண்மையை அல்லது நிறைவேற்றுவதற்குரிய அல்லது பேணுவதற்குரிய எதாவதொரு பணியை அல்லது நடைமுறைப்படுத்து வதற்குரிய எதாவதொரு அதிகாரத்தை அல்லது கிராமத்திற்குள் அல்லது வெளியே நிறைவேற்றுவதற்குரிய அரவலை ஊராட்சிக்கு அதன் இசைவுடன் மாற்றலாம். (பிரிவு 119(2))

## ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு

19. சமூகத்தில் நலிந்த பிரிவினர் ஊட்டமளிக்கக்கூடிய தேவைகளை நிறைவேற்றுதல், குழந்தைகளின் உடல் மற்றும்மன ஆற்றலை மேம்படுத்துதல், தங்களின் சொந்த மேம்பாட்டிலும், தங்களின் சமூகப் பொருளாதார தகுநிலையை உயர்த்துவதிலும் பங்கேற்க பெண்களுக்கு உரிமையளித்தல் ஆகியவற்றிக்கான இலக்கிற்கு திட்டங்களைச் செயற்படுத்துவதற்குப் திறனார்ந்த பயனுள்ள ஒப்படைப்பு முறை தேவைப்படுவதால், இச்சூழலில், பன்முகப்படுத்தப்பட்ட திட்டமிடல் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

20. மேலே குறிப்பிட பெற்ற பின்னணியில் மகளிர் மற்றும் குழந்தை நலம் திட்டங்கள் வாயிலாகவும் நிறுவனங்கள் வாயிலாகவும் ஆற்றியுள்ள சேவைகள் மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள வழிவகைகள் வெளிப்படுத்தப் பட்டவற்றாலும் தாய் சேய் நலக் காப்புக்கு ஆதரவான பிற சட்டங்கள் அடிப்படையிலும் (அ) ஊட்டச்சத்து, குழந்தை நலம் மற்றும் மகளிர் நலம் ஆகியவற்றின் மீதான திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்துதலை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப் படவேண்டும். தொழில் நுட்ப வழிகாட்டல் அளித்தல் துறையின் பங்காக இருக்க வேண்டும்; (ஆ) திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்; (இ) ஊரகப் பொறுப்பாளர்களின் பணிவரையறைகள் அரசு விதிகளின்படி காக்கப் பெறவேண்டும். ஆனால் அவர்கள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் அவைகளுக்குப் பதில் சொல்லும் பொறுப்புடையவராகச் செயற்பட வேண்டும் என்று மாநிலத்திட்டக் குழு பிரிவு பரிந்துரை செய்கிறது. 3 படி நிலை அமைப்புகளுக்கு ஒப்படைப்பதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளின் பங்கீடு கீழே சுருக்கமாக அளிக்கப் பட்டுள்ளன.

## I ஊராட்சி

| நடவடிக்கை<br>(1) | அதிகார ஒப்படைப்பு<br>(2) |
|---|---|
| 1. ஊட்டச்சத்து ஒப்படைப்புப் பணிகள் | (i) ஊட்டச்சத்துக் குறைவினால்ஏற்படும் சோகை, நுண்ணுயிர் ஊட்டத்துக்குறைவு, முன் கழுத்து கழலை போன்ற ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள பெண்கள், மகளிர், சிறுவர்களைக் கண்டறிவதற்கு ஊட்டச் சத்துப் பணியாளர்களுக்கு உதவுதல். |
| | (ii) பல்வேறு ஊட்டச்சத்து திட்டங்களுக்குப் பயனாளர்களைத் தெரிவு செய்ய உதவுதல். |
| | (iii) மாநில அரசின் நிதி ஆதவுடன் மையங் களை நடத்திப் பேணுதல் |
| | (IV) மதிய உணவு மையங்களுக்கு காய்கறி களையும் பிற பொருள்களையும் வழங்கு வதற்காக உள்ளூர் சமுதாய ஆதரவை ஊக்குவித்தல். |
| | (V) ஒவ்வொரு ஊட்டச்சத்து மதிய உணவுத் திட்ட மையத்திற்கும் வட்டாரக் குழுவை அமைத்து மதிய உணவு மையங்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளில் மகளிர் மற்றும் பெற்றோர்கள் குழுக்களைப் பங்கேற்க ஈடுபடச் செய்யல். |
| | (Vi) குழந்தையின் வளர்ச்சியைக் கண்காணித்தல். பெண்களின் பேறுகாலத்திற்கு முந்தைய/பிந்தைய காப்பு, மிகவும் எடை குறைவாகப் பிறந்த குழந்தைகளின் காப்பு, கடுமையாகவும் மிதமாகவும் சத்துக்குறைவால், பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பிலான நடவடிக்கைகளில் ஊட்டச்சத்து பணியாளர்களுக்கு உதவுவதற்கு ஊராட்சியின் பெண் உறுப்பினர்களை ஈடுபடச் செய்தல். |
| 2. ஊட்டச்சத்துத் திட்டத்தின் துணை மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் | (I) தன்னார்வ நிறுவனங்களின் ஆதாரவைத்திரட்டுதல், மகளிர் பிரிவுகளையும் தாய்மார்களுக்கான குழுக்களையும் அமைத்தல், முறையானகூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து. திட்ட நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் ஆகியவற்றில் ஊராட்சியின் பெண் உறுப்பினர்களையும் ஈடுபடுத்துதல். |

| (1) | | (2) |
|---|---|---|
| | (ii) | பொதுவாக மக்கள் தொகையின் குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச் சத்து தகுநிலை மீதான புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் ஊட்டச்சத்துப் பணியாளர் களுக்கு உதவுதல். |
| 3. குழந்தை நல மையங்கள் மற்றும் பிற மதிய உணவு மையங்களை நிறுவி நடத்துதலும் பேணுதலும் | (i) | அங்கன் வாடி சமுதாய சுதாதார மையங்களுக்கும் மதிய உணவுத் திட்ட மையங்களுக்கும் மனைகளைத் தெரிவு செய்வதில் உதவுதல். |
| | (ii) | பண்ட அறைகள், குடிநீர் வசதி கழிப்பிட வசதிகள் விளையாட்டுத் திடல்கள் மற்றும் வீட்டுப்பயன்பாட்டுக் காய்கறித் தோட்டங்கள் ஆகியவற்றுடன் கூடிய முறையான கட்டடங்களைக் கட்டுவதற்கு சமுதாய ஆதரவைத் திரட்டுதல். |
| | (iii) | இம் மையங்களின் இயக்கத்தையும் பேணலையும் மேற்பார்வையிடுவதில் சிற்றூராட்சியின் பெண் உறுப்பினர்களை ஈடுபடச் செய்தல் |
| 4. ஊட்டச்சத்தும் நலவாழ்வுக் கல்வியும் | (i) | உரிய திட்ட உணவுப் பழக்கங்களைப் பொது மக்கள் அறிவதற்காகத் தகவல் களை பரப்புதல். |
| | (ii) | பின்வருவனவற்றின் மீதான ஆலோசனை நடவடிக்கைகளில் தன்னார்வ நிறுவனங் களின் மற்றும் மகளிர் பிரிவுகளின் ஆதரவைத் திரட்டல். |
| | (அ) | இளஞ்சிறாருக்கு உணவூட்டும் பயிற்சிகள் |
| | (ஆ) | குழந்தைக்கான இடைவெளியும் சிறு குடும்ப நிலையும் |
| | (இ) | தாய்ப்பால் அளித்தல் |
| | (ஈ) | இளம் பெண்களுக்கு ஊட்டச்சத்துச் தேவைகள் |
| 5. குழந்தை நலம் | (i) | கவனமும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளைக் கண்டறிய உதவுதல். |
| | (ii) | பணிபுரியும் இடத்திற்கு அருகில் குழந்தை காப்பகங்களையும் பகலில் பாதுகாக்கும் மையங்களை அமைப்பதிலும் அனாதை விடுதிகளை அமைப்பதிலும் உதவுதல். |
| | (iii) | பெண் சிசுக் கொலைக்கானக் காரணங் களை அறிவதிலும் அதனை அழிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளிலும் சமூக நலப் பணித் துறைப் பணியாளருக்கு உதவுதல். |
| | (iv) | குழந்தை நல நடவடிக்கைகளில் அரசுச் சார்பற்ற அமைப்புகள், மகளிர் மன்றங்கள் மற்றும் பிற மகளிர் பிரிவுகள் ஆகியன பங்கேற்பதற்கு உதவுதலும் ஈடுபடச் செய்தலும். |
| | (v) | குழந்தைத் தொழிலாளரைக் கண்டறி வதற்கும் அம்முறையை நீக்குவதற்கும் அரசு முகமைகளுக்கம் அரசுச் சார்பற்ற அமைப்புகளுக்கும் உதவுதல். |

| (1) | | (2) |
|---|---|---|
| 6. மகளிர் நலம், மகளிர் சமூக பொருளாதார மேம்பாடு | (i) | மகளிர் நலத்திற்குக் கிடைக்கக் கூடிய அரசு திட்டங்களைப் பற்றிய தகவல்களைப் பரப்புதல். |
| | (ii) | நிதி மற்றும் தொழில் நுட்ப உதவி பெறக்கூடிய பெண் பயனாளர்களைக் கண்டறிவதுடன் அவர்களைத் தெரிவு செய்வதில் சமூக நலத் துறைப் பணியாளா ருக்கு உதவுதல். |
| | (iii) | பெண்களிடையே சுய உதவிப் பிரிவு களையும், சேமிப்புச் சங்கங்களையும் உருவாக்குவதில் உதவுதல். |
| | (iv) | சமுதாய ஆதரவையும் சீதனம் மற்றும் பெண்களுக்கெதிரான கொடுமைகள் போன்ற சமூகக் கேடுகளை ஒழிப்பதற்கு அரசு சாரா அமைப்புகளின் ஆதரவையும் திரட்டுதல். மற்றும். |
| | (V) | பல்வேறு நலம் மற்றும் மகளிருக்கான பொருளாதார நடவடிக்கைகளிலும் பங்கேற்பதற்கு மகளிர் மன்றங் களை ஈடுபடுத்தி அவைகளைச் செயல்திற முடையவைகளாக்குதல் |

## II ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை (1) | | அதிகார ஒப்படைப்பு (2) |
|---|---|---|
| 1. ஊட்டச்சத்து ஒப்படைப்புப் பணிகள் | (i) | ஊட்டச் சத்துக் குறைபாடுகளுடன் உள்ள குழந்தைகளையும் மகளிரையும் கண்டறி வதிலும் பயனாளர்களைத் தெரிவு செய்வதிலும் ஊராட்சிக்கு உதவுதல். |
| | (ii) | மதிய உணவு மையங்களை இயக்கிப் பேணும் செயல்பாடுகளில் ஊராட்சிகளின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடல். |
| 2. ஊட்டச்சத்துத் திட்டங்களின் துணை மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் | (i) | ஊராட்சியிடமிருந்து விவரங்களைத்திரட்டி ஆவணங்களை மாவட்ட ஊராட்சிக்குஅனுப்புதல் பொதுவாக மக்கள் தொகையின் குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து தகு நிலையின் மீதான மதிப்பீட்டறிக்கை களைத் திரட்டுதல். |
| | (ii) | மாநில மைய அரசுகளின் நிதியுதவி பெறும் ஊட்டச்சத்து திட்டங்களின் செயலாக்கத்தை மறு ஆய்வு செய்தல். |
| | (iii) | திட்டங்களின் அனைத்துச் செயற்பாடுகளில் அரசல்லாத அமைப்புகளையும் மகளிர் பிரிவுகளையும் ஈடுபடுத்துதல் |
| | (iv) | ஊராட்சியின் செயற்பாடுகளான குழந்தை காப்பு. முன் பருவக் கல்வி நடவடிக்கைகள் மற்றும் மையங்களிலுள்ள குழந்தைகளின் பிற கல்வித் தேவைகள் ஆகியவற்றில் உதவுதல். |
| 3. குழந்தை நல மையங்களையும் மதிய உணவு மையங்களையும் நிறுவி இயக்குதலும், பேணுதலும் | (i) | மையங்களுக்கான கட்டிடங்களைக் கட்டுவதிலும் உள்ளமைப்பு வசதிகளை அளிப்பதிலும் உதவுதல். |

| (1) | | (2) |
|---|---|---|
| | (ii) | குடிநீர் வழங்கலுக்கு வகை செய்தல் மற்றும் மையங்களிலுள்ள பிற வசதிகளை மேற்பார்வையிடல். |
| | (iii) | ஊராட்சிகளால் குழந்தை மற்றும் மதிய உணவு திட்டமையங்களை நிறுவுவதற்குத் தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியுதவி வழங்குதல். |
| 4. ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி | (i) | மக்கள் செய்தி வாயில்கள் போன்ற தகவல் தெரிவிக்கும் சாதனங்களைப் பயன் படுத்தியும், பாடல்கள், சுவரொட்டிகள் மற்றும் நாட்டுப்புறத் தகவல் அமைப்புகள், புகழ்பெற்ற கலைகள் குறித்த வெளியீடுகளை துண்டு தயாரித்து வழங்குதல், நல்வாழ்வு மற்றும் ஊட்டச்சத்துப் பணியாளர்களுடனும் மருத்துவத் தொழிலுக்குரியவர்களுடனும் நேருக்கு நேர் தகவல் தொடர்புகள் வைத்திருத்தல் களாலும் செய்திகளைப் பரப்புதலில் ஊராட்சி உதவுதல். |
| | (ii) | காலமுறையான இயக்கங்களுக்கு ஏற்பாடு செய்வதுடன் ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வுக் கல்வி தொடர்பிலானவற்றைத் தெரிவிக்க மருத்துவமனைகள், கல்வி நிலையங்களை ஈடுபடச் செய்தல். |
| 5. குழந்தை நலம் | (i) | குழந்தைத் தொழிலாளர், பெண் சிசுக் கொலை, குழந்தைகளுக்குத் தேவைப் படும் கவனமும் பாதுகாப்பும் போன்ற புள்ளிவிவர ஆவணத்தை தொகுத்தல். |
| | (ii) | பின்வருவனவற்றில் ஊராட்சிக்கும் அரசு சாரா அமைப்புகளுக்கும் உதவுதல் : |
| | (அ) | குழந்தைக் காப்பகங்கள், பகல் நேரக் கவனிப்பு மையங்கள் மற்றும் அனாதை விடுதிகள் ஆகியவற்றை அமைத்தல் |
| | (ஆ) | கைவிடப்பட்டக் குழந்தைகளுக்கான மையங்களை அமைத்தல். |
| | (iii) | குழந்தை நலத்திற்கான நிறுவனங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடல். |
| 6. மகளிர் நலம் : மகளிர் சமூகப் பொருளாதார மேம்பாடு | (i) | மகளிர் நலத்திற்குக் கிடைக்கக்கூடிய அரசுத்திட்டங்கள் பற்றிய தகவலைப் பாப்புவதில் ஊராட்சிக்கு உதவுதல். |
| | (ii) | நிதி மற்றும் தொழில்நுட்ப உதவித் திட்டங்களுக்கானப் பெண் பயனாளர் களைத் தெரிவு செய்யப் பெறுவதைக் கண்காணித்தல். |
| | (iii) | மகளிருக்கான வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளைக் கண்டறிவதிலும் பயிற்சிக்கும், தேவையான ஆதரவுக்கும் ஏற்பாடு செய்வதிலும் ஊராட்சிக்கு, அரசல்லாத அமைப்புகளுக்கு, சுய உதவிப் பிரிவுகளுக்கு, மகளிர் பிரிவுகளுக்கு உதவுதல். |

| (1) | | (2) |
|---|---|---|
| | (iv) | சீதனம், பாலினப் பாகுபாடு, மகளிருக் கெதிரான கொடுமைகள் போன்ற சமூகக் கேடுகளை ஒழிப்பதில் உதவுதல், சமூக ஆதரவைப் பெருக்குதல். குடும்ப ஆலோசனை மையங்களை நிறுவுவதில் உதவுதல். |
| | (v) | ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மாநில மற்றும் இந்திய அரசின் ஆதரவுடன் மகளிருக்கென செயற்படுத்தப்படும் அனைத்துத் திட்டப் பணிகளையும், திட்டங்களையும் மறுஆய்வு செய்தல். |

## III மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை (1) | | அதிகார ஒப்படைப்பு (2) |
|---|---|---|
| 1. மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டிற்குத் திட்டமிடுதல் | (i) | ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து ஆதார மூலமாக எண்பிக்கப்பட்ட புள்ளி விவரங்களைத் திரட்டி மகளிர் மற்றும் குழந்தையின் ஊட்டச்சத்து தகுநிலை, குழந்தைகளின் சமூக நிலை, மகளிரின் சமூகப் பொருளாதார நிலை, ஒருமுகப் படுத்தப் பெற்ற மற்றும் ஒருமுகப்படுத்தப் பெறாத துறைகளின் மகளிரின் உழைப்பு ஆகியவற்றின் மீது ஆண்டு தகுநிலை அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை மாநிலத்திலும் நாட்டிலும் மிகச்சிறந்த வற்றுடன் ஒப்பிடுதல். |
| | (ii) | மாவட்டத்தில் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டிற்கான ஆண்டுத் திட்டத்தைத் தயாரித்து அது குறித்து அரசுக்கு அறிவுரை கூறல். |
| | (iii) | மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டங்கள், செயல்முறைத் திட்டங்கள் ஆகியவற்றை மறுஆய்வு செய்தல். |
| 2. ஊட்டச்சத்து ஒப்படைப்புப் | (i) | ஊராட்சி ஒன்றியத்தின் செயல்பாடு களையும் நடவடிக்கைகளையும் கண் காணித்தல், மேற்பார்வையிட்டுக் கண்காணித்தல் |
| | (ii) | ஊட்டச்சத்துத் திட்டத்திற்கானப் பொருள் களின் முறையான கொள்முதலையும் பகிர்வினையும், மாநில மற்றும் மைய அரசின் நிதியுதவி பெறும் ஊட்டச்சத்து திட்டங்களின் செயலாக்கத்தையும் மறு ஆய்வு செய்தல். |
| 4. குழந்தை நல மையங்களையும் மதிய உணவு மையங்களையும் நிறுவி இயக்குதலும், பேணுதலும் | (i) | மையங்களின் முறையான செயலாக்கத்தையும் பேணுகையையும் மறுஆய்வு செய்தல். |
| | (ii) | மையங்களை நிறுவி பேணுதலுக்காகத் தொழில் நுட்ப மற்றும் நிதியுதவி அளித்தல். |
| 5. ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி! | (i) | தகவல் பரப்புதலிலும் நல்வாழ்வு, ஊட்டச்சத்து, கல்வி, நீர் வழங்கல், ஊரகவளர்ச்சி முதலியவற்றை உள்ளடக்கிய துறை களின் நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பை உறுதி செய்வதிலும் ஊராட்சிஒன்றியத்திற்கு உதவியளித்து மேற் பார்வையிடுதல். |

| (1) | (2) |
|---|---|
| | (ii) மாவட்ட நிலையில் மருத்துவமனை களையும் கல்வி நிலையங்களையும் ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வுக் கல்வியில் ஈடுபடுத்துதல். |
| 6. குழந்தை நலம் | (i) குழந்தைத் தொழிலாளர் பெண் சிசுக்கொலை, குழந்தைக்குத் தேவைப் படும் காப்பும் பாதுகாப்பும் ஆகியவற்றின் மீது ஆவணவடிவில் அடிப்படை விவரங் களைத் திரட்டுதல், மாநில அரசின் ஆலோசனைக்குரிய ஆண்டுத் தகுநிலை அறிக்கைகளைத் தயாரித்தல். |
| | (ii) பல்வேறு குழந்தை நலத்திட்டங்களின் மீதான செயல் விளைவு ஆராய்வினை நடத்துதல். |
| | (iii) வருமான உருவாக்கம் மற்றும் சுயவேலை வாய்ப்பு நடவடிக்கைகளுக்குக் கடன் பெறுவதில் உள்ள தடைகளை அகற்ற நடவடிக்கைகள் எடுத்தல். |
| | (iv) மகளிர் மற்றும் குழந்தை தொடர்பில் சமூகக்கேடுகளை ஒழிப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவியளித்தல். |
| | (V) உதவிக்கரம் தேடும் மற்றும் துன்பப்படும் மகளிருக்கான நிறுவனங்களை நிறுவுவதில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல். |

## நிருவாக, நிதி மற்றும் சட்டச்சிக்கல்கள்

21. மாநிலத் திட்டக்குழு பிரிவின் பரிந்துரைகளின்படி, குழந்தை நலமையங்கள், சமுதாய ஊட்டச்சத்து மையம், மதிய உணவு மையங்கள் மற்றும் குழந்தை நலம் மற்றும் மகளிர் நலத்திற்கான பிற நிறுவனங்கள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் பெற வேண்டும். இது, பள்ளி வளாகம் ஒன்றிலோ அல்லது வேறெங்காவது நடத்தப்பெறுகின்றன என்பதைப் பொருட்படுத்தாமல், மதிய உணவு மையங்கள் ஊராட்சிகளின் பொறுப்பில் இருக்கவேண்டும். மதிய உணவுத் திட்ட மையங்களின் செயற்பாட்டில் தொடர்பறாமலிருக்கும் பொருட்டு, பொருள்களின் கொள்முதல் மற்றும் பகிர்வினைக் கையாளுவதற்குத் நடைமுறையிலிருந்து வரும் நிருவாக ஏற்பாடானது, தற்போது உள்ளவாறே தொடரப்பட வேண்டும்.

22. மதிய உணவு திட்டத்திற்கான உணவு வகைகளின் கொள்முதல் மற்றும் பகிர்வு தற்போதைய நடைமுறையிலுள்ளவாறே தொடர்ந்து தமிழ்நாடு உணவு பொருள் வழங்கு கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பெறும். மதிய உணவுத் திட்ட மையங்களின் இயக்கம் மற்றும் பேணுகையை ஊராட்சி களுக்கும் அவற்றை மேற்பார்வையிடும் பணி ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளிக்கப்பெறவேண்டும். ஊராட்சிகளுக்கான நிதிமானியம் அளிக்கப் பெறவேண்டும். அத்துடன் மதிய உணவுத் திட்ட பணியாளர்களுக்குரிய சம்பளங்கள் ஊராட்சிகளால் வழங்கப்பட வேண்டும்.

23. சமூக மேம்பாட்டின் கண்ணோட்டத்திலிருந்து, குழந்தை நலமையங்கள், "மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு மையங்கள்" ஆகச் செயற்படு வேண்டுவது தவிர ஊட்டச்சத்து செயல்முறைத் திட்டங்களில் இம்மையங்கள், நல்வாழ்வு, காப்பு, குடும்பநலம், முன்பருவக் கல்வி, பொழுதுபோக்கு, வாழ்க்கைத் தொழில் பயிற்சி, எழுத்தறிவு, போட்டி விளையாட்டுகள் மற்றும் வயது வந்தோருக்கான எழுத்தறிவு போன்ற பிற நடவடிக்கைகளில் அவை ஈடுபட வேண்டும்.

24. எஞ்சிய நலப்பணிகளில், மகளிர் மன்றங்களைச் ஊராட்சிகளுடன் இணைக்கப் பெறுவது பொருத்தமானதாகும். தற்போது 11520 மன்றங்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகளுக்காக ஆண்டுதோறும் கிட்டத்தட்ட ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மன்றங்கள், மகளிர் மற்றும் குழந்தைகளின் தேவைகளுக்குரிய தர மேம்பாட்டிலும், ஏற்பிலும் கவனத்தை ஒருமிக்கச் செலுத்தி ஆற்றல்மிக்க மற்றும் உறுதியான பங்கெடுப்பிற்கு முடுக்கி விடப்பட வேண்டும்.